பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

22 05 2025 12 40

வியாழக்கிழமை பிற்பகல்

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் நோக்கில் நாட்டில் அதிநவீன கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- ரயில்வே கட்டமைப்பு வசதிகள் கடந்த 10 ஆண்டுகளில் பெருமளவு மேம்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

- தமிழக ரயில் திட்டங்களுக்கு இந்த ஆண்டு ஆறாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக மத்திய இணையமைச்சர் திரு எல் முருகன் தெரிவித்துள்ளார்.

- ஆபரேஷன் சிந்தூர் தொடர்பான நாடாளுமன்றக்குழுவின் 3-வது குழுவினர் இன்று ரஷ்யா புறப்பட்டுச் சென்றனர்.

- மலேசியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் நோக்கில் நாட்டில் அதிநவீன கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தானில் பிகானிரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மும்பை – பிகானிர் இடையிலான புதிய ரயில் சேவையை தொடங்கி வைத்த பிரதமர், தமிழகத்தில் 9 ரயில் நிலையங்கள் உட்பட நாடுமுழுவதும் அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்ட 103 ரயில் நிலையங்களை காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

மேலும், 26 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்து புதிய திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், நாடுமுழுவதும் நெடுஞ்சாலைகள், விமான நிலையங்கள், ரயில் நிலையங்கள் மற்றும் ரயில் பாதைகள் நவீனமயமாக்கப்பட்டு வருவதாக கூறினார்.

முந்தைய ஆட்சிக் காலங்களில் இத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை விட தற்போது ஆறு மடங்கு கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான 11 ஆண்டு கால ஆட்சியில் ரயில்வே கட்டமைப்பு வசதிகள் இதுவரை இல்லாத அளவுக்கு மேம்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

நாடுமுழுவதும் 34 ஆயிரம் கிலோமீட்டர் தொலைவுக்கு புதிய ரயில் பாதைகள் அமைக்கப்பட்டு இருப்பதுடன் வந்தே பாரத், நமோ பாரத் போன்ற புதிய தலைமுறை ரயில்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதையும் திரு அஸ்வினி வைஷ்ணவ் சுட்டிக்காட்டினார்.

>><><><><<

சென்னை பரங்கிமலை ரயில் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன், கடந்த பத்தாண்டுகளில் ரயில்வே துறை பெருமளவு வளர்ச்சி கண்டுள்ளதாக கூறினார்.

2014-ஆம் ஆண்டுக்கு முன்பாக தமிழக ரயில் திட்டங்களுக்கு 800 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில், தற்போது ஆறாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பரங்கிமலை ரயில் நிலையம் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு பயணிகளுக்கான புதிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

2047-ஆம் ஆண்டு இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு மேற்கொண்டு வருவதாக திரு எல். முருகன் குறிப்பிட்டார்.

*(வாய்ஸ் பைட் - எல். முருகன் - 43 செகண்ட்ஸ்)*

>><><><><<

ஆபரேஷன் சிந்தூர் மற்றும் பாகிஸ்தானின் தீவிரவாத ஆதரவு குறித்து உலக நாடுகளிடம் எடுத்துரைப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றக்குழுவின் 3-வது குழுவினர் இன்று ரஷ்யா புறப்பட்டுச் சென்றனர்.

திமுக-வைச் சேர்ந்த திருமதி கனிமொழி தலைமையிலான இக்குழுவினர் ஸ்பெயின், கிரீஸ், ஸ்லோவேனியா, லாத்வியா நாடுகளுக்கும் செல்லவுள்ளனர்.

ரஷ்யா புறப்படும் முன் செய்தியாளர்களிடம் பேசிய திருமதி கனிமொழி, தீவிரவாதத்தால் இந்தியாவில் ஏற்பட்டுள்ள உயிரிழப்பு குறித்து உலக நாடுகளுக்கு எடுத்துரைக்க இருப்பதாக கூறினார்.

தீவிரவாதத்திற்கு எதிராக அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தையும் திருமதி கனிமொழி வலியுறுத்தினார்.

இதனிடையே, சிவசேனா உறுப்பினர் திரு ஸ்ரீகாந்த் ஷிண்டே தலைமையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சென்றுள்ள நாடாளுமன்றக் குழுவினர் அந்நாட்டு அமைச்சர் திரு **Sheikh Nahayan Mabarak Al Nahyan** –ஐ சந்தித்து ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து எடுத்துரைத்தனர்.

>><<>><<>><<

ஜம்மு கஷ்மீரின் கிஷ்த்வார் மாவட்டத்திற்கு உட்பட்ட **Singhpora Chatroo** வனப் பகுதியில் பாதுகாப்புப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்று வருகிறது.

இப்பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலின் பேரில், பாதுகாப்புப் படையினர் அங்கு சென்றபோது தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டதை அடுத்து பாதுகாப்புப் படையினரும் பதிலடி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

ஜெய்ஸ் இ முகமது இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள் இந்த தாக்குதலை நடத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

>><<>><<>><<

தேர்தல் ஆணையம் சார்பில் தமிழகம், புதுச்சேரியை சேர்ந்த வாக்குச்சாவடி முகவர்களுக்கான பயிற்சி முகாம் புதுதில்லியில் இன்று தொடங்கியது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த முகாமில், திமுக, அஇஅதிமுக, காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், நாம் தமிழர் உள்ளிட்ட கட்சிகளை சேர்ந்த வாக்குச்சாவடி முகவர்கள் பங்கேற்றுள்ளனர்.

தமிழகம், புதுச்சேரி, கேரளா, அஸ்ஸாம், மேற்குவங்கம் மாநிலங்களில் அடுத்த ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், வாக்குச்சாவடி முகவர்கள் தேர்தல் அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றுவது குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது.

>><><><><<

தங்க நகை அடமானம் வைப்பதில் புதிய விதிமுறைகளை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று ரிசர்வ் வங்கியை தமிழக நிதியமைச்சர் திரு தங்கம் தென்னரசு வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ஏழை, நடுத்தர குடும்பத்தினர் தங்களது அவசர தேவைகளுக்காக நகைக் கடனை சார்ந்திருக்கும் சூழலில் ரிசர்வ் வங்கியின் புதிய விதிமுறைகள் சாமானிய மக்களை பாதிக்கும் என்ற குறிப்பிட்டுள்ளார்.

நகை மதிப்பில் முன்பை விட 5 சதவீதம் குறைத்து 75 சதவீதம் தான் கடன் வழங்கப்படும் என்ற புதிய விதிமுறை, அவசர தேவைகளுக்காக வரும் மக்களை நேரடியாக பாதிக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

மேலும் நகைக்கான ஆதாரம் மற்றும் அத்தியாவசியமற்ற விவரங்களை கோரும் புதிய நடைமுறையையும் உடனடியாக கைவிட வேண்டும் என்றும் திரு தங்கம் தென்னரசு கேட்டுக் கொண்டுள்ளார்.

>><><><><<

தமிழகத்தின் நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கோடியக்கரை அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்த மீனவர்களை சுற்றிவளைத்த இலங்கை படையினர் அவர்களது மீன்பிடி உபகரணங்கள் மற்றும் ஜிபிஎஸ் கருவிகளையும் பறித்துச் சென்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செல்வன் ஜெபராஜ் - 41 செகண்ட்ஸ்)

>><><><<

விளையாட்டுச் செய்திகள்

மலேசியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 23-21, 21-17 என்ற செட் கணக்கில் வியட்நாமின் **Nguyeni**-ஐ வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் துருவ் கபிலா – தனிஷா கிராஸ்டோ இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>><><><<

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Suhaas Kandeti - Sri Vaibavi Anmula** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

அர்மினியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Akanksha Dileep Nitture – Soha Saduq** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த 6-4, 7-6 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் **Anastasia – Marta Mariia** இணையை வென்றது.

>><><><<